# The Wakf System in Islam and its Application in Sri Lanka

## இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கும் இலங்கையில் அதன் நடைமுறையும்

A.M. Aashiq

Faculty of Islamic Studies, Jamiah Naleemiah, Beruwala, Sri Lanka.
mohamedaashiq2014@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாம் வறுமையை ஒழிப்பதற்காகவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைவதற்காகவும் இறை பாதையில் செலவளிப்பதை கடமையாக்கியுள்ளது. அதற்காக வேண்டி ஸகாத் வழங்கல்,ஸதகா செய்தல்,அன்பளிப்பு வழங்கல், வஸிய்யத் செய்தல், வாரிசுரிமைப் பகிர்வு, குற்றப்பரிகாரம் வழங்கல், நஷ்டஈடு கொடுத்தல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற இன்னோரன்ன வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த முறைமைகளுள் வக்பு செய்தல் என்பது அதி முக்கியத்துவம் பெறும் ஒன்று. நபி (ஸல்) அவர்களின் காலந்தொட்டு இன்றுவரை வக்பு ஒழுங்கானது பல்வேறு வளர்ச்சியினை அடைந்துள்ளது. கால,இட, சூழலுக்கு ஏற்ப வக்பு என்ற பொறிமுறையின் அமுலாக்கம் வேறுபட்டுக் காணப்படலாம். எனினும், இப்பொறிமுறைக்கென்று சில நிபந்தனைகளையும், வரையறைகளையும் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் நவீன கால இஸ்லாமிய அறிஞர்கள் புராதன பிக்ஹு சட்டங்களை அறிந்து வக்பு தொடர்பான புதிய சட்ட ஒழுங்கை ஷரிஆவின் உயர் இலக்குகளுக்கு ஏற்ப முன்வைக்க வேண்டும். இந்தப் பின்னணியில் வக்பு பற்றிய அறிமுகம், இஸ்லாத்தில் அதன் சட்ட திட்டங்கள், அதற்கான ஆதாரங்கள், அவற்றின் வகைகள் மற்றும் அது தொடர்பான நவீன காலப் பிரச்சினைகளும், அவற்றிற்கான தீர்வுகள் பற்றியும் இலங்கையில் அதன் நடைமுறை எவ்வாறு காணப்படுகிறது, அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் போன்றவற்றை இஸ்லாமிய ஷரீஆவின் பின்னணியில் இருந்து இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

**திறவுச் சொற்கள்:** வக்பு, வக்பு சபை, வக்பு நீதிமன்றம்

### ஆய்வின் அறிமுகம்

இஸ்லாமிய வக்பு ஒழுங்குமுறை என்பது ஒரு சமூக, பொருளாதார சமநிலையைப் பேணுவதற்கான ஒரு சாதனமாகும். அதேபோல ஏழை, எளியவர்களுக்கும் உறவினர்களுக்கும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட வழிமுறையாகாக் காணப்படுகிறது. வக்பு ஒழுங்குமுறை என்பது இஸ்லாத்தில் மிகப்பழமை வாய்ந்ததும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான நிறுவனமாகும். நபி (ஸல்)அவர்களின் காலம் தொட்டே இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இஸ்லாத்தில் முதலாவது வக்பு நிகழ்வானது உஹதுப் போரில் முஸ்லிம்களுடன் கொல்லப்பட்ட ஒரு யூதரினால் நபி (ஸல் )அவர்களுக்கு வக்பு செய்யப்பட்டதாகும்.[1]

தடுத்து வைப்பது, நிறுத்தி வைப்பது அல்லது கட்டி வைப்பது எனும் கருத்தை "வக்பு" என்கின்ற அரபுச் சொல் இஸ்லாமிய பரிபாஷையில் குறித்து நிற்கின்றது. தடுத்து வைப்பது யாதெனில் பிரயோசனம் பெறத்தக்க, நிலையான சொத்துக்களின் மீதான ஆளுகையை தடுத்து அவற்றின் பயன்பாடு முழுவதையும் நன்மையான காரியங்களின் பால் ஆக்கிவிடுவது எனப் பொருள்படும். சட்ட அறிஞர்கள் மத்தியில் "ஹப்ஸ்","ஸதகா" போன்ற சொற்களும் வக்பு எனும் சொல்லுக்கு பகரமாக சிலவேளைகளில் பயன்படுத்தப் படுகின்றது. வக்பு என்பது பரிபாஷைக்கருத்தில்" ஒருவர் தன் மீதான சொத்துரிமையை முடங்கச் செய்து அவற்றின் பயன்பாடுகளை ஏழைகளுக்கோ அல்லது நன்மையான காரியங்களிலோ தர்மம் செய்வதை குறிக்கும்"

---

[01] யூசுப் அல் கர்ழாவி: (2015) நிழாமுல் வக்பி பில் பிக்ஹில் இஸ்லாமி, தாருல் மகாஸித், கெய்ரோ. பக்:03

வக்பு செய்தல் பற்றி அல்குர்ஆன் நேரடி வசனங்களின் மூலம் குறிப்பிடாவிடினும் பொதுவாக ஏழை, எளியவர்களுக்கு செலவளித்தல் கடமை எனும் கருத்தில் பல இடங்களில் இதனை வலியுறுத்தியுள்ளது. ''அவர்கள் (எத்தகையவர்கள் என்றால்) செல்வ நிலைமையிலும், வறுமை நிலைமையிலும் தானம் செய்து கொண்டே இருப்பார்கள். கோபத்தை விழுங்கி விடுவார்கள் மனிதர்களின் குற்றங்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் இத்தகைய அழகிய குணம் உடையவர்களை நேசிக்கின்றான்.'' (ஆல இம்ரான்: 134)

'' நிச்சயமாக ஆண்களிலோ, பெண்களிலோ எவர்கள் தானம் செய்து அழகான முறையில் அல்லாஹ்வுக்காக பிறருக்குப் பொருளைக் கடனாகவும் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அது இருமடங்காக்கப் படுகின்றது. பின்னும் அவர்களுக்கு மிக கண்ணியமான கூலியும் உண்டு. (சூரா அல் ஹதீத்:18)

அவர்களுடைய பொருள்களில் (வாய்திறந்து யாசகம்) கேட்பவர்களுக்கும் கேட்காதவர்களுக்கும் பாகம் உண்டு.'' (ஸூரா அத்தாரியாத்:19)

அந்த வகையில் வக்பு பூரண இஸ்லாமிய கட்டமைப்பைக் கொண்டது.

இஸ்லாமிய ஷரிஆ சட்டங்களில் அதற்கென தனி இடமுண்டு. இது போன்ற ஒழுங்கு வேறு எந்த சட்டவியல் கோட்பாடுகளிலும் கண்டுகொள்ள முடியாது. முதன் முதலில் இஸ்லாம் தான் இதனை அறிமுகம் செய்தது. இது பற்றி ஷாபி (ரஹ்) அவர்கள் ''ஜாஹிலிய்யக் கால மக்கள் நன்மை நோக்காகக் கொண்டு எந்தவித பூமியையோ, வீடுவாசலையோ ஒதுக்கி வைக்கவில்லை. இவற்றை இஸ்லாமே அறிமுகம் செய்தது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.[2]

எனவே, இதனடிப்படையில் இலங்கையில் வக்பு சட்டம், நடைமுறை என்பன வக்பு சபை எனும் ஒழுங்கின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது இலங்கை அரசின் அங்கீகாரத்தோடு செயற்படும் பழமை வாய்ந்த ஒரு நிறுவனமாகும். குறுகிய சில இலக்குகளையே இந்நிறுவனம் இதுவரை காலமும் பூர்த்தி செய்துள்ளது. இந்த நிறுவனத்தினுள் பாரிய சீர்திருத்தங்களும், முன்னேற்றங்களும் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் இந்த ஆய்வு இலங்கையில் வக்பு சபையின் தோற்றம், வளர்ச்சி அதன் செயற்பாடுகள், அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய பகுதிகளை ஆய்வு செய்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஏழை, எளியவர்களுக்கு உதவி புரிவதற்காகவும், அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட வக்பு ஒழுங்குமுறையானது கால, இட, சூழலுக்கு ஏற்ப பல மாற்றங்களை கண்டுள்ளது. எனினும், இலங்கை போன்ற முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் ஒரு நாட்டில் வக்பு ஒழுங்குமுறை என்பது எவ்வாறு வினைத்திறனாக அமுல்படுத்தலாம், அதில் எவ்வாறான மாற்றங்கள்,திருத்தங்கள் மேற்கொள்ளலாம், நவீன கால மாற்றத்திற்கேற்ப அதன் நடைமுறை எப்படி அமைதல் வேண்டும் என்பதைக் கண்டறிவதே ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

1. இஸ்லாமிய ஷரீஆவின் ஆதாரங்களின் ஒளியில் வக்பின் அந்தஸ்தையும், வகிபாகத்தையும் சுட்டிக்காட்டுதல்.

2. இஸ்லாமிய வக்பு ஒழுங்குமுறை சம்பந்தமான நவீன பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குதல்.

3.இலங்கை போன்ற முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் ஒரு நாட்டில் வக்பு ஒழுங்கு முறையை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான, வினைத்திறனான வழிமுறைகளைக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு இஸ்லாம் மார்க்கம் சார்ந்து அதன் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றை மையப்படுத்தி அமையப்பெற்றுள்ளதால் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளையும், இலங்கை சூழலில் எவ்வாறு இதனை நடைமுறைப்படுத்தப்படலாம் என்பது பற்றியும் ஆய்வு செய்வதனால் ஒருவித நேர்காணல்களையும் அடிப்படையாகக் கொண்ட தரவுகள் இவ்வாய்வுக்கென எடுத்தாளப்பட்டுள்ளன.

**ஆய்வின் எடுகோள்கள்**

1.கால, இட,சூழலுக்கு ஏற்ப இஸ்லாமிய வக்பு ஒழுங்குமுறை நடைமுறைப்படுத்தப்படும் விதம் வித்தியாசப்படும்.

2. தற்காலத்தில் இலங்கையில் வக்பு ஒழுங்குமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான பல வழிமுறைகள் உள்ளன.

[02] அபூ ஸஹ்ரா: (2005) முஹாழராதுன் பில் வக்பி, தாருல் பிக்ரில் அரபி. பக்:09

**ஆய்வுப்பரப்பு**

இவ்வாய்வு வக்பு பற்றிய இஸ்லாமிய ஷரீஆவின் நிலைப்பாட்டினை பொதுவாகவும் தற்காலத்தில் இலங்கையில் இதன் நடைமுறை எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றிக் குறிப்பாகவும் ஆய்வு செய்கின்றது.

**இலக்கிய மீளாய்வு**

இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கு முறை பற்றியும், அதன் சிறப்பம்சங்கள், அதன் வகைகள், சட்டங்கள் பற்றியும் பல இஸ்லாமிய அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். உதாரணமாக:-

1. முஹாழராதுன் பில் வக்பி- அபூ ஸஹ்ரா
2. நிழாமுல் வக்பி பில் பிக்ஹில் இஸ்லாமி - யூசுப் அல் கர்ளாவி
3. அல்வக்பு அல்இஸ்லாமி மஜாலாதுஹூ வ அப்ஆதுஹூ - அஹ்மத் அர்ரைஸூனி
4. நிலாமுல் வக்பி வல் இஸ்திப்தால் அலய்ஹி - முஹம்மத் பஹீத்
5. அல்வக்பு அல்இஸ்லாமி வத்தன்மியா அல்முஸ்தகில்லா - இப்றாஹீம் அல்பய்யும்.

ஆனால், இவை எதுவும் இலங்கையில் அதன் நடைமுறை பற்றி ஆய்வு செய்யவில்லை. ஒரே ஒரு நூல் இலங்கையில் ”வக்பு சட்டமும் அதன் நடைமுறையும்” எனும் தலைப்பில் ஏ.எச்.ஜி. அமீன் அவர்களினால் எழுதப்பட்டுள்ளது. என்றாலும், இது பூரணமாக அதன் இலக்கை அடைய வில்லை. வெறுமனே வக்பு தொடர்பான இலங்கையின் சட்டங்களையே இது உள்ளடக்கியுள்ளது. அந்த வகையில் எனது ஆய்வானது தற்காலத்தில் வக்பு ஒழுங்குமுறை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வினையும் இலங்கையில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொருத்தமான வழிமுறைகளையும் முன்வைப்பதன் மூலம் மேலே கூறிய ஆய்வுகளில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது.

**ஆய்வின் அமைப்பு**

இவ்வாய்வானது மூன்று பெரும் பகுதிகளையும் அதனுள் சில உப பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

1. இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கு முறையும் அதன் சட்டங்களும்

2.வக்பு ஒழுங்குமுறை தொடர்பான நவீன காலப் பிரச்சினைகள்

3.இலங்கையில் வக்பு ஒழுங்கு முறையின் மாற்றங்களும், சீர்திருத்தங்களும்

## 01. இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கு முறையும் அதன் சட்டங்களும்

### 01.1. வக்பு: ஓர் அறிமுகம்

இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கு முறை என்பது ஒரு இலாப நோக்கமற்ற வழிமுறையாகக் கருதப்படுகின்றது. அல்லாஹ்வின்பால் நெருக்கத்தை உண்டு பண்ணும் நற்கருமங்களில் ஒன்றாகும். எனவே, வக்பு என்கின்ற இந்த பதப் பிரயோகத்தின் வரைவிலக்கணத்தை பொருத்தவரையில் பின்வருமாறு சுருக்கமாகக் கூற முடியும்.

மொழிக்கருத்து:- இது ”வகப” என்ற அரபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. அதாவது இதன் கருத்து தடுத்து வைத்தல், நிறுத்தி வைத்தல் என்பதாகும்.[3]

பரிபாஷைக்கருத்து:- இஸ்லாமிய அறிஞர்கள் வக்பு தொடர்பாக பல வரைவிலக்கணங்களை கூறியுள்ளனர். பிக்ஹுத் துறையின் பிரதான நான்கு இமாம்களும் தமது மத்ஹபிற்கு ஏற்ப இதனை வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

- அபூ ஹனிபா (ரஹ்) :- குறிப்பிட்ட ஒரு சொத்தை அல்லது பொருளை பிறர் உரிமையிலிருந்து தடுத்து வைத்தல்.

---

[03] இப்னு மன்ளூர்:(1414ஹி) லிஸானுல் அரபி, தாரு ஸாதிர், பெய்ரூத். பாகம்:09,பக்:359

- மாலிக் (ரஹ்) :- ஒரு பொருளின் பிரயோசனத்தை அல்லது பலனை குறிப்பிட்ட காலத்திற்கு உரிமையாளரின் சொத்துரிமையில் இருக்கின்ற நிலையில் தடுத்து வைத்தல்.
- ஷாபிஈ (ரஹ்) :- பிரயோசனம் அளிக்கக்கூடிய ஒரு பொருளை அல்லது சொத்தை அதன் அசல் தன்மை நீங்காமல் தடுத்து வைத்தல்.
- அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) :- அசல் தன்மையை(சொத்துரிமை) நிறுத்தி வைத்தல், பலனை முதலீடு செய்தல்.[4]

இங்கு வரைவிலக்கணங்கள் பலவிதப்படுவதற்கான காரணம் நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை உமர் (ரலி) அவர்களை பார்த்துக் கூறினார்கள் ”நீங்கள் விரும்பினால் அதன் அசலை அல்லது சொத்துரிமையை தக்கவைத்துக் கொண்டு, அதனை ஸதகா செய்வீராக” இதனை வைத்தே இஸ்லாமிய அறிஞர்கள் அசலை அல்லது சொத்துரிமையை வைத்துக்கொண்டு சொத்தை நல்ல விடயங்களுக்காக வழங்குதலே வக்பு என்கின்றனர்.

எனவே, மேற்போந்த வரைவிலக்கணங்களின் சுருக்கம் என்னவெனில், ‘‘வக்பு செய்யப்பட்ட பொருளின் அல்லது சொத்தின் அசல் தன்மை மாறாமலும், உரிமை மாறாமலும் அதன் பிரயோசனத்தை இறை திருப்திக்காக செலவிடும் செயன்முறையே வக்பு எனப்படும்”

### 01.2 வக்பு செய்வதற்கான ஆதாரங்கள்

ஒருவர் தனது சொத்தை அல்லது பொருளை வக்பு செய்ய முடியுமாக இருந்தால் கண்டிப்பாக அல்குர்ஆன், சுன்னாவில் ஆதாரம் இருக்க வேண்டும். அதனடிப்படையில் வக்பு செய்ய முடியும் என்பதற்கான ஆதாரங்கள் அல்குர்ஆனில் நேரடியாக வராத போதிலும் பொதுவாக நல்ல விடயங்களுக்காக செலவளிப்பதை அல்குர்ஆன் தூண்டுகின்றது. இவற்றுள் வக்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

**அல்குர்ஆன்**

”உங்களுக்கு விருப்பமானவற்றை இறை பாதையில் செலவழிக்காத வரை நீங்கள் நன்மையை அடைந்திட முடியாது. மேலும், எதனை நீங்கள் செலவழித்தாலும் திண்ணமாக, அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான்.” (ஆல இம்ரான்: 92)

மேற்கூறிய வசனம் இறங்கிய போது அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தனக்கு மிகவும் விருப்பமான பேரீச்ச மரத் தோட்டத்தை அல்லாஹ்வின் பாதையில் வக்பு செய்தார்கள்.

இந்த அல்குர்ஆன் வசனம் தொடர்பாக இமாம் குர்துபி(ரஹ்) அவர்கள் குறிப்பிடும்போது” இந்த வசனம் இறங்கிய போது ஸஹாபாக்கள் நல்ல வழியில் செலவு செய்வதையே இது குறிக்கிறது என்பதை புரிந்து கொண்டார்கள் அதில் ஒன்றுதான் வக்பு செய்தலாகும்.[5]

உங்களிடம் கடன் பட்டவர் வசதியற்றவராக இருந்தால் (அவருக்கு) வசதி ஏற்படும்வரை, நீங்கள் காத்திருங்கள். நீங்கள் உண்மையை அறிந்திருப்பின் (அசலையே அவர்களுக்கு) நீங்கள் தர்மம் செய்து விடுவது உங்களுக்கு இன்னும் சிறந்ததாகும். (அல்குர்ஆன் : 2:280)

மேலும், இவர்கள் எந்த நன்மையைச் செய்தாலும் அது புறக்கணிக்கப்படமாட்டாது. இறையச்சமுள்ளவர்களை அல்லாஹ் நன்கு அறிபவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் : 3:115)

இவை அனைத்தும் பொதுவாக இஸ்லாத்தில் செலவு செய்வதை வலியுறுத்தினாலும் அதில் பிரதானமானது வக்பு செய்தல் எனும் செயன்முறையாகும். ஏனெனில், அது நிலையான தர்மம் ஆகும்.

---

[04] காமில் முஹம்மத் ஹுசைன்:(2018) அதருல் வக்பி பி த.்.மி வ தத்விரித் த.்.லீம் அஷ்ஷராஈ வ தத்பிகாதுஹு அல்முஆஸிரா, அல்மு.்.தமருத் துவலி அல்அவ்வலு, ஜோர்டான். பக்:744

[05] குர்துபி :(1974) அல் ஜாமி.். லிஅஹ்காமில் குர்ஆன், தாருல் குதுபில் மிஸ்ரிய்யா, கெய்ரோ. பாகம்:04,பக்:132

**அல்ஹதீஸ்**

‘‘ஒரு முஸ்லிம் மரணித்துவிட்டால் அவனது மூன்று விடயங்களை தவிர அனைத்து விடயங்களும் துண்டிக்கப்பட்டு விடும். 1 நிலையான தர்மம் 2.பிரயோசனம் அளிக்கக்கூடிய கல்வி 3.அவருக்காக பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை.(முஸ்லிம்)

இதில் வரக்கூடிய நிலையான தர்மம் என்பதற்கு விளக்கம் அளிக்கும் ஹதீஸ்கலை அறிஞர்கள் நிலத்தையோ அல்லது சொத்தையோ முஸ்லிம்களுக்காக வக்பு செய்வதையே இது குறிக்கும் என்கின்றனர்.[6]

2.ஒரு முறை உமர் (ரலி) அவர்கள் கைபர் யுத்தத்தில் ஒரு நிலத்தை வெற்றி கொண்டார்கள் அப்போது நபி (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார்கள், நான் ஒரு நிலத்தை வெற்றி கொண்டுள்ளேன் நான் ஒருபோதும் அதனை விட பெறுமதியான நிலத்தை கைப்பற்றியதும் இல்லை. நான் அதனை என்ன செய்ய என்று வினவினார்கள். அதற்கு நபியவர்கள்:” நீ விரும்பினால் அதன் அசல் தன்மையை தக்க வைத்துக் கொண்டு அதன் பலனை ஸதகா செய்வீராக என்று கூறினார்கள். எனவே உமர் (ரலி) அவர்கள் அதனை விற்காமலும், அன்பளிப்புச் செய்யாமலும் வாரிசுரிமைச் சொத்தாக்காமலும் ஏழைகளுக்கு தர்மம் செய்தார்கள்.( புகாரி)

3. உஸ்மான் (ரலி) அவர்கள் “பி.்.ரு ரூமா“ எனும் கிணற்றை வாங்கி வக்பு செய்தார்கள்.( நஸாஈ)

**இஜ்மா**

முஸ்லிம் சமூகத்தினுள் கருத்து வேறுபாடின்றி ஏகோபித்த அம்சமாக வக்பு காணப்படுகின்றது. ஸஹாபாக்களுள் உஸ்மான் (ரலி), அலி(ரலி), தல்ஹா(ரலி), ஸுபைர்(ரலி), ஸைத் பின் தாபித் (ரலி), இப்னு உமர் (ரலி) போன்றவர்கள் வக்புடன் அதிகம் தொடர்புபட்டவர்களாகக் காணப்பட்டனர். இது தொடர்பாக ஜாபிர் (ரலி) கூறும்போது: ”ஸஹாபாக்களில் எவரும் வக்பு செய்யாமல் இருந்ததில்லை. அது தொடர்பாக எழுதி வைத்திருந்தார்கள். அதனை விற்பனை செய்வதையோ, அன்பளிப்பு செய்வதையோ தடுத்தும் இருந்தார்கள்”.[7] எனவே, அன்றுமுதல் இன்று வரை முஸ்லிம் சமூகம் கருத்து வேறுபாடின்றி வக்பு செய்வதை அங்கீகரித்து, ஊக்குவித்து வந்துள்ளது.

**01.3 வக்பு தொடர்பான நிபந்தனைகள்**

வக்பு ஒழுங்கு, செயன்முறை இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் செல்லுபடியாக வேண்டுமாயின் நான்கு நிபந்தனைகள் உண்டு.

**01. வக்பு செய்பவர்**

அ. புத்தி சுவாதீனம் உள்ளவர்.

ஆ. சுதந்திரமானவர்.

இ. பருவ வயதை அடைந்தவர்

ஈ. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடியுமானவர்.

**02. வக்பு செய்யப்படும் பொருள்.**

அ. ஆகுமானதாக இருத்தல்.

ஆ. பிரயோசனம் உள்ளதாக இருத்தல்.

இ. அறியப்பட்டதாக இருத்தல்.

ஈ. ஒப்படைக்க முடியுமாக இருத்தல்.

உ. குறிப்பிட்ட சொத்து வக்பு செய்பவருக்கு சொந்தமாக இருத்தல்.

---

[06] நி∴மத் அப்துல் லத்தீப்:(1997) அதருள் வக்பி பி தன்மியதில் முஜ்தமயி, ஜாமிஅதுல் அஸ்ஹர், எகிப்து. பக்:18

[07] சுலைமான் இப்னு அப்தில்லாஹ்:(2004) அல்வக்பு வ அதருஹு பி தன்மியதி மவாரிதில் ஜாமிஆத், ஜாமிஅதுல் இமாம் முஹம்மத் இப்னு ஸுஊத், சவூதி அரேபியா. பக்:82

**03. வக்பு செய்யப்படுவது:**

அ. வக்பு செய்யப்படுவது தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்படல். உதாரணமாக:- உறவினர் அல்லது உறவினரல்லாத ஒரு நபர் அல்லது வக்பு சபையின் நிர்வாகம்.

ஆ. நன்மையான வழியில் வக்பு செய்யப்பட வேண்டும். உதாரணமாக:- ஸகாத் பெற தகுதியானவர்கள், உறவினர்கள், தேவையுடையவர்கள்.

இ. வக்பு செய்யப்படுபவர் வக்பை பெறுவதற்கான தகுதி உடையவராக இருத்தல். உ+ம்:- முஸ்லிம்களுக்கு பள்ளிவாசலை வக்பு செய்தல்.

**04. வார்த்தைப் பிரயோகம்**

வக்பு செய்தமைக்கான வார்த்தைப் பிரயோகம் பின்வரும் பண்புகளை சுட்டிக்காட்ட வேண்டும்.

அ. நிரந்தரத் தன்மை.

ஆ. வக்பு செய்யப்படுவதை தெளிவாக வரையறுத்தல்.

இ. வக்பு செய்யப்படுவதை உரிமையாக்குதல்.[8]

**01.4 வக்பின் வகைகள்**

இஸ்லாத்தில் வக்பு பல்வேறு கோணங்களில், பலவாறு பிரித்து நோக்கத்தக்கது. அவற்றின் பிரிவுகள் பல்வகைப்பட்ட தாயினும் அவற்றைப் பின்வரும் இரு பகுதியில் உள்ளடக்க முடியும்.

01. பயன்தகு வகையான வக்பு

02. இட அமைப்பு வகையான வக்பு[9]

**01. பயன்தகு வகையான வக்பு**

இது இரண்டு வகைப்படும்.

**1. குடும்பம் அல்லது உறவினர் மீதான வக்பு**

இது ஒருவர் தனது குடும்பத்திற்கோ அல்லது உறவினர்களுக்கோ வக்பு செய்வதை குறிக்கும். வக்பின் மூலமான பலாபலன்கள் வக்பு செய்தவரின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் தனது உறவினருக்கு சென்றடையும். உறவினர் ஒரு தனி நபராகவோ அல்லது குறிப்பிட்ட குழுவினராகவோ இருக்கமுடியும். இவ்வகையும் சந்தேகத்திற்கு அப்பால் நன்மைதரும் வட்டத்தினுள் உள்ளடங்குகிறது. அல் குர்ஆன் இதனை ஸூரதுந் நிஸாவில் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

“மேலும் நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கே அடிபணிந்து வாழுங்கள். அவனோடு எதனையும் இணையாக்காதீர்கள் தாய் தந்தையரிடம் நல்ல விதமாக அன்புடன் நடந்து கொள்ளுங்கள்.மேலும் உறவினரான அன்டை வீட்டார், அந்நியரான அன்டை வீட்டார், பக்கத்திலிருக்கும் நண்பர், மற்றும் வழிப்போக்கர், உங்கள் கைவசத்திலுள்ள அடிமைகள் ஆகியோருடன் நயமாக நடந்து கொள்ளுங்கள்......”(4:36)

சட்ட அறிஞர்கள் மத்தியில் இவ்வகை வக்பு கூடுமா? எனும் கருத்து வேறுபாடு நிலவியபோதும், பெரும்பான்மையானோர் ஆகும் என்றே கூறுகின்றனர். இதற்கு தல்ஹா (ரலி) அவர்கள் தனது பைரஹா எனும் தோட்டத்தை ஸதகா செய்ய நாடிய போது நபி (ஸல்) அவர்கள் கூறிய வார்த்தையை ஆதாரமாகக் கொள்கின்றனர்.” நீர் அதனை உறவினர்களுக்கு வழங்கி விடுவது நன்மையாகும். மேலும், உமர் (ரலி) அவர்களிடம் ”தனது வக்பை வறியவர்களுக்கும், உறவினர்களுக்குமாக சேர்ப்பித்தார்” என்பதையும் ஆதாரமாகக் கொள்கின்றனர்.[10]

---

[08] அப்துர் ரஹ்மான் இப்னு இப்றாஹீம்:(2001) அல்அவ்காப் அல்இஸ்லாமிய்யா வ தவ்ருஹா அல்ஹழாரிய், தாருல் மஆதிர், மதீனா. பக்:94

[09] யூசுப் அல் கர்ழாவி: (2015) நிழாமுல் வக்பி பில் பிக்ஹில் இஸ்லாமி, தாருல் மகாஸித், கெய்ரோ. பக்:120

[10] தலால் உமர்:(1998) அல்வக்புல் அஹ்லி, தாருல் கிப்லா,ஜித்தா. பக்:145

**2. தர்ம நோக்குடனான வக்பு**

இது எப்பிரதேசத்திற்கும் உரித்தான மனித நலன்களோடு தொடர்புடைய நன்மையான விடயங்களின் பால் அமையப்பெற்ற வக்பாகும். இது பின்வரும் அமைப்பில் காணப்படலாம்.

1. மார்க்கம் சார்ந்த தர்மம்:- பள்ளிவாயல்கள், த.ஃவா நிறுவனங்கள், அல்குர்ஆன் மத்ரசாக்கள் நிறுவுதல்.

2. கல்வி சார்ந்த தர்மம்:- பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் நிறுவுதல்.

3. சமூகம் சார்ந்த தர்மம்:- மத்திய நிலையம்(மர்கஸ்), கழகம், அனாதை இல்லம், அங்கவீனர் இல்லம் போன்றவற்றை நிறுவுதல்.

4. சுகாதாரம் சார்ந்த தர்மம்:- வைத்தியசாலை, கிணறுகள், கிளினிக் சென்டர்கள் நிறுவுதல்.

5. த.்.வா சார்ந்த தர்மம்:- முஸ்லிமல்லாதவர்களுக்கு இஸ்லாத்தை எத்தி வைப்பதற்காக புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளியிடுதல், மொழிபெயர்த்தல்.[11]

**02. இட அமைப்பு வகையான வக்பு**

இது மூன்று வகைப்படும்.

**1. அசையா சொத்துக்களின் வக்பு**

இது இஸ்லாத்தின் ஆரம்பம் முதல் இருந்து வருகின்ற ஒன்றாகும். இந்த வக்பு முறை நிலங்களோடு மாத்திரம் சுருங்கியதன்று. ஏனெனில், உஸ்மான் (ரலி) அவர்கள் ''ரூமா'' எனும் கிணற்றை வாங்கி வக்பு செய்தார்கள். எனவே, இவ்வகையினுள் வீடுகள், விவசாய நிலங்கள், கிணறுகள் என்பன அடங்கும்.

**02. அசையும் சொத்துக்களின் வக்பு**

பிரயோசனத்தை ஈட்டித்தருகின்ற நிலையான சொத்துக்களாகக் காணப்படும் அசையும் சொத்துக்களை வக்பு செய்யலாமா? என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இவற்றுள் குறிப்பாக ஆயுதங்கள், தளபாடங்கள், கருவிகள், மிருகங்கள் என்பன அடங்கும். ஆயினும், உணவு போன்ற பொருள் நிலையற்றவைகளை வக்பு செய்ய முடியாது என்பதுவே பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தாகும்.[12]

**03. நாணயங்களின் வக்பு**

திர்ஹம்கள், தீனார்கள் , நாணயங்கள் இருவகையான வக்புகளுள் அமைந்து காணப்படுகின்றன. ஒன்றில் அவை வர்த்தக நாணயங்களாகவோ அல்லது பாதுகாக்கப்பட்ட நாணயங்களாகவோ இருக்க முடியும். இவை பின்வரும் இரு நிலைகளுள் அமையலாம்.

1. நாணயங்கள் நிலையான சொத்துக்களாக இருக்கும் வகையில் செய்யப்படும் வக்பு. இவற்றில் எதுவித ஷரிஆ ரீதியான பயன்பாடும் கிடையாது. வெறுமனே அலங்காரப் பொருளாய் காணப்படும்.

2. நாணயங்கள் நிலைபெறாது அவற்றின் மூலமாக பயன்பாடுகளை ஈட்டித்தரும் வக்பு. இவை ஷரிஆ ரீதியான பொது நலன்களைக் கருத்திற் கொள்ளும். உதாரணம், ஏழை எளியவர்களுக்கு கடன் உதவி வழங்குவதற்காக வக்பு செய்யப்படும் நாணயங்கள் இவற்றுள் அடங்கும்.[13]

---

[11] சுலைமான் இப்னு அப்தில்லாஹ்:(2004) அல்வக்பு வ அதருஹூ பி தன்மியதி மவாரிதில் ஜாமிஆத், ஜாமிஅதுல் இமாம் முஹம்மத் இப்னு ஸுஊத், சவூதி அரேபியா. பக்:100

[12] மினா அப்துல் முன்இம்:(2010) அல்அவ்காப் அல்கைரிய்யா வ இமாரதுல் இன்சான் வல்மகான், தாருல் இஸ்லாம், கெய்ரோ. பக்:59

[13] அஹ்மத் அர்ரைஸூனி:(2014) அல்வக்பு அல்இஸ்லாமி மஜாலாதுஹூ வ அப்ஆதுஹூ, தாருல் கலிமா, எகிப்து. பக்:35

**02. வக்பு ஒழுங்கு தொடர்பான நவீன காலப்பிரச்சினைகள்**

**02.1 வக்பு செய்யப்பட்டதை விற்றல்.**

வக்பு செய்யப்பட்ட பொருள் அல்லது சொத்து ஒழுங்கான பராமரிப்பு இன்மையின் காரணமாக முழுமையாக சேதம் அடையவோ அல்லது பகுதி அளவில் சேதம் அடையவோ முடியும். அதேபோல, முழுமையான பிரயோசனத்தை அந்தச் சொத்தில்

இருந்து பெற முடியாத நிலையையும் உருவாக்கும். எனவே, இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிட்ட அந்த சொத்தின் பலனை, பிரயோசனத்தை இழந்துவிடாமல் இருக்க அதனை விற்க முடியும் எனக் குறிப்பிடுகின்றனர்.

- இப்னு குதாமா அவர்கள் தமது "அல்முக்னி" எனும் கிரந்தத்தில் இது பற்றி பின்வருமாறு கூறினார்கள்.

"ஒரு வக்பு சொத்து பாழடைந்து அல்லது சேதம் அடைந்து விட்டால் அதன் பலன் அற்றுப் போய் விட்டால். உதாரணமாக வீடு பாழடைந்த நிலையில் அதனை சீர்செய்ய முடியாத நிலை உருவானால் அல்லது ஒரு பள்ளிவாயல் மக்கள் யாரும் அதில் தொழவில்லையாயின் அதில் சில பகுதிகளை விற்று எஞ்சிய பகுதிகளை புனர்நிர்மாணம் செய்ய முடியும் அல்லது முழுமையாக விற்று அதன் பெறுமதியை பெறவும் முடியும்.[14]

### 02.2 வக்பு செய்யப்பட்டதை முதலீடு செய்தல்

இஸ்லாமிய பொருளியல் அறிஞர்கள் வக்பை முதலீடு செய்வதற்கான சில வழிமுறைகளைக் குறிப்பிடுகின்றனர்.

### 01. அல்முராபஹா (இலாபமீட்டல் வியாபாரம்)

வக்பு சொத்தின் ஒரு பகுதியை மூலதனமாக இட்டு வக்பை அதிகரிக்கச் செய்யும் செயன்முறை. உதாரணமாக ஒருவர் ஒரு பொருளை வக்பு சபையிடம் வாங்கிக் கேட்டால் வக்பு சபை அதனை குறித்த கடையில் வாங்கி அதனைக் கொள்வனவு செய்த விலையில் இருந்து அதிகமான விலைக்கு விற்று இலாபமீட்டல். இது இரு தரப்பாலும் உடன்பட்டவாறே நிகழ வேண்டும்.

### 02. அல்இஜாரா ( வாடகைக்கு விடுதல் )

வக்பு செய்யப்பட்ட காணியில் உள்ள கட்டிடத்தை வாடகைக்கு விடுவதை இது குறிக்கும் அல்லது அந்தக் காணியில் ஒரு முதலீட்டாளரைக் கட்டிடம் ஒன்றை கட்ட அனுமதித்து அதற்கான வாடகையைப் பெறுவது. அந்தக் கட்டிடம் ஒரு வைத்தியசாலையாகவோ அல்லது அநாதை இல்லமாகவோ அல்லது கல்வி நிலையமாகவோ பின்னர் மாற்றப்படலாம்.

கட்டிடத்தின் மூலம் கிடைக்கும் வாடகையை ஏலவே தீர்மானித்து விட வேண்டும். அந்தவகையில் வக்பு நிர்வாகத்தினர் அந்தக் கட்டிடத்தை விற்கவோ அல்லது அவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கவோ அதிகாரம் கொண்டுள்ளனர்.[15]

## 03. இலங்கையில் வக்பு சட்டமும் நடைமுறையும்

### 03.1 இலங்கையில் வக்பு சட்டம்

ஒரு நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தி ஆட்சியை சிறப்பாகவும் அமைதியாகவும் மேற்கொள்ள வரையறுக்கப்பட்ட சட்ட அமைப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது போலவே ஒரு சமூகத்தின் மரபுகளையும் அவர்களுக்கு மத்தியில் பரஸ்பர உறவுகளையும் வளர்க்க அந்த சமூகத்திற்கென பிரத்தியேகமான சட்ட அமைப்புக்கள் அவசியம். அந்த வகையில் இலங்கையில் பல்லின மக்களுக்கும் தங்களுக்கென தனியார் சட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன. உதாரணமாக, தேசவழமைச் சட்டம், கண்டியச் சட்டம். இதன் வரிசையில் இலங்கை முஸ்லிம்களுக்கு 1806 ஆம் ஆண்டு தொடக்கமே இந்த தனியார் சட்ட உரிமை வழங்கப்பட்டு வந்தது. 1931இல் இது இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் என மறு வடிவம் பெற்றது.[16]

---

[14] அப்துல் ரஸ்ஸாக்:(2005) இதாரதுல் அம்வாலுல் வக்பி வ ஸுபுலு இஸ்திஸ்மாரிஹி. பக்:20

[15] T.S.அமினுத்தீன்:(1998) இலங்கை தனியார் சட்டம், அல்அமீன் பதிப்பகம், கொழும்பு. பக்:10

[16] வக்பு திருத்தச் சட்டம்:(1998) முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. பக்:16,17

இலங்கையில் முஸ்லிம் சிறுபான்மையினரின் தனிநபர் வாழ்வுடன் தொடர்புடைய முஸ்லிம் தனியார் சட்டமானது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

1. வக்பு தொடர்பான விடயங்கள்
2. திருமணம் தொடர்பான விடயங்கள்
3. விவாகரத்து தொடர்பான விடயங்கள்
4. வாரிசுரிமை தொடர்பான சட்டங்கள்
5. ஜனாஸா தொடர்பான விடயங்கள்[17]

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்பத்திலிருந்தே இஸ்லாமிய ஷரீஅத்தைப் பேணி நடக்க தம்மால் முடியுமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அரச சட்டங்களுடன் தமது சட்டங்களை இணைத்தும் இயலாத போது சமூக அமைப்பிலும் நடைமுறைப்படுத்தி வந்துள்ளனர். இலங்கை முஸ்லிம்கள் தாம் நடைமுறைப்படுத்திய ஷரீஅத் சட்டங்களை குறிப்பாக இரு முறைகளில் அமுல்படுத்தி வந்தார்கள்.

1. சமூக மரபுகள் ரீதியாக
2. அரசு சட்டவாக்கத்தின் மூலமாக

இவ்வகையில் அரச அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட தனியார் சட்ட அமைப்புகளுள் ஒன்றே வக்பு தொடர்பான சட்ட அமுலாக்கம் ஆகும்.

இலங்கையில் ஏனைய மத தாபனங்களையும் அதனுடனான சொத்துக்களையும் பராமரிப்பதற்கு தேவையான சட்ட ரீதியான அமைப்புகள் உள்ளது போலவே இலங்கை முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒழுங்காக பரிசளிக்கப்படவும், பள்ளிவாசல் சொத்துக்கள் பாதுகாக்கப்படவும் மற்றும் மஸ்ஜித், வக்பு சொத்து போன்றவற்றினதும் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்த்து வைக்கவும் மற்றும் ஏனைய விடயங்களை மேற்பார்வை செய்யவும் அரசால் ஏற்படுத்தப்பட்ட சட்ட ஏற்பாடே வக்பு சட்டமாகும். இதன் பிரதான சட்டம் 1956 ஆம் ஆண்டில் 57 ஆம் இலக்கச் சட்டமாகும். இது 1962, 1988 ஆகிய இரு வருடங்களில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் முக்கிய பிரிவுகளாக

1. பள்ளிவாசலை பதிவுசெய்வது
2. முஸ்லிம் ஸியாரம் மற்றும் தொழும் இடம் ஆகியவற்றை பதிவு செய்வது
3. தர்ம நம்பிக்கை நிதியம் அல்லது வக்பு
4. பதிவு செய்த பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் அதிகாரம், கடமைகள் மற்றும் செயற்பாடுகள்.
5. முஸ்லிம் தர்ம நிதியம்[18]

### 03.2 இலங்கையில் வக்பின் நடைமுறை

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சட்டத்தை அமுலாக்கும் முகமாக உள்நாட்டு விவகார அமைச்சினால் வக்பு திணைக்களம் நிறுவப்பட்டது. வக்பு சட்டத்தின் கீழ் ஒரு முஸ்லிமே அதன் பிரதம நிர்வாகியாக இருத்தல் வேண்டும். அதன்படி வக்பு ஆணையாளராக ஒரு முஸ்லிம் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக ஏழு பேர் கொண்ட ஒரு வக்பு சபையும் அமைச்சரால் நியமிக்கப்பட்டது. எனவே, அவ்வகையில் வக்பு ஆணையாளரும் வக்பு சபையும், திணைக்களமும் வக்பு சட்டங்களை அமுல் நடாத்தி வந்தனர். காலப்போக்கில் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டதால் 1982இல் 33ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிர்வாகத் துறையில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக மாவட்ட நீதிமன்ற அதிகாரம் பொருந்திய மூவர் கொண்ட வக்பு நியாய சபை (Wakf Tribunal) ஒன்று ஏற்படுத்தப்பட்டது 1982 ஆம் ஆண்டு திருத்தத்தின்

விளைவாக வக்பு திணைக்களம் முஸ்லிம் சமய கலாசார அமைச்சுக்கு மாற்றப்பட்டது. தற்போது வக்பு திணைக்களம் முஸ்லிம் சமய கலாசார விவகார அமைச்சின் கீழ் 1994 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. இன்று நிர்வாக வசதிக்காக திணைக்களம் இரண்டு பிரிவுகளாக செயல்பட்டு வருகின்றது.

---

[17] A.H.G.அமீன்:(2006) வக்பு சட்டமும் நடைமுறையும், அல்அமீன் பதிப்பகம், கொழும்பு. பக்:38

[18] வக்பு திருத்தச் சட்டம்:(1998) முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. பக்:53

1. சமய கலாசார பிரிவு
2. வக்பு சபை

### 03.3 வக்பு சபை

இச்சபை முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் கீழ் இயங்கி வரும் அதேநேரம் பள்ளிவாயல்கள், அதன் நிர்வாகம் அதற்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் போன்ற பல கடமைகளை செய்து வருகிறது. வக்பு திணைக்களத்திற்கு பொறுப்பாக முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் பணிப்பாளரே காணப்படுகிறார். இச்சபை ஏழு பேர் கொண்ட உத்தியோகத்தர்களையும் கொண்டது.[19]

**வக்பு சபையின் பணிகள்**

1. இலங்கையில் மஸ்ஜிதுகள் மற்றும் நம்பிக்கை நிதியங்களுக்கான நம்பிக்கையாளர்களை நியமித்தல், அவர்களை பதவி நீக்கம் செய்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணித்தல்.

2. மஸ்ஜிதுகள், நம்பிக்கை நிதியங்கள் போன்ற நிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தலும், பராமரித்தலும்.

3. மேற்படி நிறுவனங்களின் கணக்குகளை பரிசோதித்து சரிபார்த்தல்.

4. மஸ்ஜிதுகளைப் பதிவுசெய்தல்

5. வக்பு சபையினால் வழங்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்க வக்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்துள்ளது.

### 03.4 வக்பு நீதிமன்றம்

மாவட்ட நீதிமன்றம் ஒன்றுக்குச் சமமாக அதிகாரம் கொண்டுள்ள இந்நீதிமன்றம் ஒரு மேன்முறையீட்டு (Court of Appeal) நீதிமன்றம் ஆகும். இது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டு செயற்படுகிறது. இம்மூவரும் சட்டத்துறை அறிஞர்களாகவே காணப்படுகின்றனர். இதன் செயலாளராக ஒரு சட்டத்தரணி காணப்படுவார். வக்பு நீதிமன்ற அதிகாரங்கள் நம்பிக்கை நிதியம் அல்லது வக்பு சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்.

1. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் எந்தவொரு நம்பிக்கையாளரை நீக்குவது.

2. தேவைப்படின் நம்பிக்கையாளரையோ,நம்பிக்கையாளர்களையோ நம்பிக்கை நிதியத்திற்கு அல்லது வக்பிற்கு நியமிப்பது.

3. நிதி சம்பந்தப்பட்ட அறிக்கையை மன்றத்துக்கோ அல்லது சபைக்கோ சமர்ப்பிக்க அறிவுரை வழங்குவது.

4. நம்பிக்கை நிதியம் அல்லது வக்பு சொத்தின் ஒரு பகுதியை ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் நோக்கங்களுக்கேற்ப நலன் கருதி ஒதுக்கும் பிரகடனம்.

5. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் நிர்வாகத்திற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்துவது.

6. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் நம்பிக்கையாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட செயலை செய்யப்பணிப்பது.

7. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் எந்த ஒரு நம்பிக்கையாளரை நம்பிக்கைக்கு முரணாக அல்லது கடமையில் தவறிய தாகவோ, குற்றம் புரிந்தார் எனப்பிரகடனப்படுத்துவது.

8. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் நம்பிக்கையாளர் தாம் செய்த நம்பிக்கைக்கு முரண் அல்லது கடமை தவறுகள் காரணமாக ஒரு தொகையை நஷ்ட ஈடாக வழங்குமாறு தீர்ப்புக் கூறுவது.

[19] S.A.M. முஸம்மில்:(1992) பள்ளிவாசல், அல்ஹுதா வெளியீடு, கொழும்பு. பக்:25

9. ஒன்று தொடக்கம் ஒன்பது வரை குறிப்பிட்ட விடயங்களைப் பொறுத்து மேலும் ஏனைய நிவாரணங்களை வழங்குவது.[20]

மாவட்ட நீதிமன்றத்துக்கு உள்ள எல்லா அதிகாரங்களும் வக்பு நீதிமன்றத்துக்கு உண்டு

1.சாட்சிகளை வரவழைத்தல் அல்லது வருகையை வற்புறுத்தல்.

2. ஆவணங்களை வழங்குமாறு வற்புறுத்தல்

3. சாட்சிகளுக்கு சத்தியம் அல்லது உறுதிமொழி விவகாரங்கள்.[21]

மன்றம் எல்லா கருமங்களிளும் மாவட்ட நீதிமன்ற வழிமுறைகளை பின்பற்றுவதோடு தீர்ப்புகளை செயல்படுத்துவதற்கு மாவட்ட நீதிமன்ற அதிகாரத்தை பெறுகிறது. மேலும் குடியியல் வழிமுறை கோவையை மாற்றும், செயல் படுத்தும் அதிகாரங்களை மாவட்ட நீதிமன்ற மட்டத்தில் பூரணமாக பின்பற்றும். வக்பு நீதிமன்றம் ஆரம்ப மற்றும் மேன்முறையீடு ஆகிய இரண்டு அதிகாரங்களையும் பெற்றுள்ளது.

### 03.5 முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்பு (Muslim Charitable Trust Or Wakf )

பள்ளிவாசல்கள் முஸ்லிம் புனித ஸ்தலங்கள், இஸ்லாமிய மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்பு என்பன இலங்கை முஸ்லிம் பள்ளிவாயல் மற்றும் தர்ம நிதியம் அல்லது வக்பு சட்டக்கோவை மூலம் நிர்வாகம் செய்யப்படுகின்றன. (Muslim Mosque and Charitable Trusts or Wakf Acts in Sri Lanka) இந்த அமைப்புக்கள் அனைத்தும் வக்பு சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். இந்தச் சட்டைக் கோவையின் பாகம் இரண்டும் மூன்றும் பள்ளிவாசல்கள் சம்பந்தமாகவும் பாகம் நான்கு இஸ்லாமிய புனிதஸ்தலங்கள் மற்றும் இஸ்லாமிய மத வழிபாட்டு தலங்கள் பற்றியும் பாகம் ஐந்து முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்பு ஆகியவைகள் பற்றியும் குறிப்பிடுகிறது.

**இதன் நோக்கங்கள்**

1. முஸ்லிம்களின் அல்லது அவர்களின் ஒரு பகுதியினரின் வறுமைக்கு நிவாரணம் அளிப்பது.

2. முஸ்லிம்கள் அல்லது அவர்களின் ஒரு பகுதியினரின் கல்வி மேம்பாட்டுக்காக

3. பொதுவாக இஸ்லாத்தை மேம்படுத்துவதற்காக

4. எந்த ஒரு பள்ளிவாயலையோ அல்லது இஸ்லாமிய புனிதஸ்தலத்தையோ அல்லது இஸ்லாமிய மத வழிபாட்டுத் தலத்தையோ நிர்வாகம் செய்தலும் அவற்றில் மார்க்க வழிபாட்டுக் கிரிகைகளை நிறைவேற்றலும்.

5. முஸ்லிம்கள் அல்லது அவர்களின் ஒரு பகுதியினருக்கு ஏதாவதொரு பயனளிக்கக்கூடிய நோக்கத்திற்காக

6. முஸ்லிம் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு மார்க்க சமய,தர்ம நோக்கத்திற்காக.[22]

ஒரு பள்ளிவாசலை பொறுத்தவரையில் முஸ்லிம் தர்ம நிதியம் அல்லது வக்பு சபையுடன் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், அதன் நம்பிக்கையாளர் பின்வரும் விடயம் சம்பந்தமாக தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

1.நம்பிக்கையாளரக்ளின் பெயர்கள்

2. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் எல்லா சொத்துக்களின் விபரங்கள்.

3. அந்த சொத்துக்களின் பூரண வருமானத் தொகை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிகழ்வுகளிலிருந்து 12 மாத காலம்.

---

[20] வக்பு திருத்தச் சட்டம்:(1998) முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. பக்:27

[21] நீதிமுரசு:(2002-2004) முரசு:38,39 இலங்கை சட்டக் கல்லூரி, கொழும்பு. பக்:35

[22] A.H.G. அமீன்:(2006) வக்பு சட்டமும் நடைமுறையும், அல்அமீன் பதிப்பகம், கொழும்பு. பக்:53

4. அந்த சொத்துக்காக அரசாங்கத்துக்கோ அல்லது பகுதி அதிகாரிக்கோ வருடாவருடம் வழங்கும் எல்லா வரிகளும் கொடுப்பனவுகளும்.

5. சராசரி வருட செலவுகள்

6. நம்பிக்கை நிதியத்தின் அல்லது வக்பின் பணம் இருப்பின் அதற்காக ஒதுக்கி வைத்த தொகை.

அ. ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும், ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நம்பிக்கை நிதியம் அல்லது வக்பிலிருந்து வழங்கும் ஊதியம்

ஆ. பள்ளிவாசல்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகள்

இ. வேறு சமய தேவைக்காக

ஈ. வேறு தேவைக்காக

வக்பு சபைக்கு ஒவ்வொரு வருடமும் ஜூன் முதலாம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட படிவங்களில் செலவு, வருட வருமானம் மற்றும் மார்ச் 31ம் தேதி வரை கணக்கு விபரங்களை அனுப்புவது தர்ம நிதியத்தின் அல்லது வக்பு நம்பிக்கையாளரின் கடமையாகும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் மூலமோ அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்டவர் மூலமோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சபை அல்லது அனுமதிக்கப்பட்ட அதிகாரிக்கு தர்ம நிதியத்தின் ஆவணங்களை பகல் காலத்தில் பரிசோதனை செய்யலாம் மற்றும் நம்பிக்கையாளரிடமிருந்து தகவல்களை, ஆவணங்களைக் கோரலாம். சபையின் அனுசரணையோடு பணிப்பாளர் அல்லது தர்ம நிதியத்தின் அல்லது வக்பில் ஆர்வமுடைய ஐவர் பணிப்பாளர் சான்றிதழோடு மாவட்ட நீதிமன்றத்தில் அந்த நிதியம் அல்லது வக்பின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையோ சம்பந்தமாக வழக்கு தொடரலாம்.

1. நிதியத்தின் அல்லது வக்பின் சொத்து விபரங்களை கோரி

2. மற்றும் மேலதிக வேறு சகாயத்தை வழக்கின் சூழ்நிலையை பொருத்தும் வழங்குமாறு கோரலாம்.

**03.6 வக்பு சபையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்கள்**

முஸ்லிம் பள்ளிவாசல் தர்ம நம்பிக்கை நிதியம் அல்லது வக்பு சட்டம் 1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு முஸ்லிம் தனியார் சட்டமாக அமுலில் இருந்து வந்துள்ளது. அதற்கு 1962, 1982 ஆம் ஆண்டுகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், 1982

ஆண்டுக்குப் பிறகு சுமார் 36 வருட காலம் எந்த விதமான திருத்தமும் கொண்டுவரப்படவில்லை. எனவே முஸ்லிம்களின் நலன் கருதி இந்த சட்டத்துக்கு திருத்தம் அவசியமும், அவசரமும் ஆகும்.அந்தவகையில் இந்த சபையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்களாவன.

1. வக்பு சபை என்பது இலங்கையிலுள்ள மஸ்ஜிதுகள், மஸ்ஜித் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், வக்பு சொத்துக்கள் முதலான விடயங்களில் கவனம் செலுத்துகிறது. எனினும், இவ்விடயத்தில் கண்காணிப்பாக இருந்து வருகின்ற போதும் மஸ்ஜித் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது நிர்வாகிகள் விடயத்தில் சில தவறுகள் விட்டிருப்பதை அதன் சட்டக் கோவையில் இருந்து அறிய முடிகின்றது. உதாரணமாக, வக்பு சட்டத்தில் நம்பிக்கையாளர் தராதரம் குறிப்பிடப்படாததனால் நம்பிக்கையாளரைதா தேர்ந்தெடுப்பது இன்றும் பலராலும் பலவிதமாக விமர்சிக்கப்படுகிறது. பண வசதி உள்ள பள்ளிவாசலுக்கு நம்பிக்கையாளர் நியமனத்துக்கு பெரும் போட்டி நிலவுகிறது. திருத்தி அமைக்கப்பட்ட சட்டத்தில் வக்பு சபைக்கு பள்ளிவாசல் நம்பிக்கையாளர் நியமனத்தை உறுதிப்படுத்துவது மட்டுமே அதற்குரியதாகும். எனவே, வக்பு சபையானது அல்குர்ஆன், சுன்னா கூறும் வகையில் நம்பிக்கை பொறுப்பாளருக்கு இருக்க வேண்டிய பண்புகளை வரையறுத்து, பொருத்தமானவர்களை நியமிக்க வேண்டும்.

2. வக்பு சட்டத்தில் வக்பு நீதிமன்றத்துக்கு ஒரு தீர்ப்பை திருத்தி அமைக்கும் அதிகாரம் கிடையாது. இந்த அதிகாரம் காதி மேன்முறையீடு சபைக்கு உண்டு. வக்பு நீதிமன்றத்துக்கு இடைக்கால நிவாரணம் வழங்கும் அதிகாரமும் கிடையாது. உதாரணமாக, வஸில் எதிர் ரியால் WT/81 என்ற வழக்கில் வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறவிருந்த நம்பிக்கையாளர் தேர்தலை இடைநிறுத்தக்கோரி செய்த விண்ணப்பம் வக்பு நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என தீர்ப்பளிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, இந்த அதிகாரமும் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

3. இந்த சட்டக் கோவையின் மூலம் தெரிவு செய்யப்படும் வக்பு நீதிமன்ற நீதிபதிகள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டு அவர்களது கருமங்கள் முழுவதும் முஸ்லிம் சமய, கலாசார விவகாரங்கள் அமைச்சின் கீழ் இருந்து வருகிறது.

இவர்கள் இரண்டு அமைச்சின் கீழ் வருவதால் வக்ஃபு நீதிபதிகள் பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, அவர்களை ஒரு தனி அமைச்சின் கீழ் அதாவது நீதி அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டும்.

4. வக்பு மேன்முறையீட்டு மன்றத்துக்கு (Wakf Tribunal) மேலதிக அதிகாரங்கள் வழங்குவதும் குறிப்பாக சொத்து சம்பந்தமாக ஈடு வைப்பது, வாடகைக்கு வழங்குவது, விற்பது போன்ற விடயங்களில் சீரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த மன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

5. வக்பு சபை மற்றும் நீதிமன்ற ஊழியர்களுக்கு போதுமான ஊதியம் வழங்கப்படாமையினால் அவர்களது பணியில் தாமதமும், பொடுபோக்கும் காணப்படுகிறது. எனவே, உரிய முறையில் மாதாமாதம் முஸ்லிம் சமய, கலாசார விவகாரங்கள் அமைச்சினால் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

6. வக்பு சொத்துகள் பாதிப்படையாமல் இருக்கவோ அல்லது சேதமடையாமல் இருக்கவோ அதனை ஒழுங்கான முறையில் முதலீட்டு அதன் பிரயோசனத்தை அடைய முயற்சிக்க வேண்டும்.

6. வக்ஃபு சொத்துக்கள் வெறுமனே பள்ளிவாசல் மற்றும் மார்க்க பணிகளுக்காக மட்டுமன்றி பொதுப் பணிகளுக்காகவும் செலவளிக்கப்பட வேண்டும். கல்வித்துறையை மேம்படுத்த, சுகாதாரத் துறையை மேம்படுத்த, சமூக, கலாசாரத் துறையை மேம்படுத்த என முஸ்லிம்களின் சமூக முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து பகுதிகளிலும் செலவளிக்கப்பட வேண்டும்.

8. அதே போல வக்பு செய்ய முடியுமான விடயங்களிலும் ஒரு பரந்துபட்ட தன்மை காணப்படவேண்டும். வெறுமனே நிலங்களையும், வீடுகளையும் வக்பு செய்வதோடு சுருங்கி விடாமல் வக்பு செய்யும் சொத்துக்களின் வட்டம் விசாலித்துக்காணப்பட

வேண்டும். உதாரணமாக கால்நடைகளை வக்பு செய்தல், பணத்தை வக்பு செய்தல், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வக்பு செய்தல்.

9. முஸ்லிம் நாடுகளில் இருந்து வருகின்ற நிதியை குறிப்பிட்ட ஒரு நிறுவனமோ அல்லது தனி நபரோ கையாளாமல் அவை அனைத்தும் வக்பு சபையின் ஊடாக முஸ்லிம்களின் தேவைகளின் முன்னுரிமை அடிப்படையில் செலவிடப்பட வேண்டும். இதன் மூலம் பணம் வீன் விரயம் செய்யப்படவோ, சுரண்டப்படவோ மாட்டாது. உதாரணமாக, ஒரு சில நிறுவனங்கள் பணத்தைப் பெற்று பள்ளி, கிணறு போன்றவற்றையே அதிகம் கட்டியுள்ளனர். அதிலும் குறைந்த செலவில் நிர்மாணித்து மீதியை சுரண்டுகின்றனர். எனவே இந்த நிதி உதவிகள் அனைத்தும் வக்பு சபையின் ஊடாக வந்து பதியப்பட வேண்டும்.

10. அதேபோல வக்ஃபு சொத்துக்கள் மற்றும் நிதிகள் முஸ்லிம்களின் முதன்மைத் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம் தனவந்தர்கள் மற்றும் புரவலர்கள் தங்களது சொத்துக்களை அல்லது நிதிகளை வக்பு செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும் அந்த நிதிகள் பெறப்படும் விதம், செலவளிக்கப்படும் விதம் என்பவற்றை வெளிப்படைத்தன்மைக்கு விடவேண்டும். நலன் விரும்பிகளுக்கு அது தொடர்பாக தகவல் அறியும் உரிமையும் வக்பு சபை மூலம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

**ஆய்வின் முடிவுகள்**

மேற்குறித்த ஆய்வின் பின்னணியில் நோக்குகின்ற போது இஸ்லாமிய ஷரிஆவில் வக்பு என்பது மிகப் பழமை வாய்ந்த செயன்முறையாகும். அதேபோல அதற்கென சில நிபந்தனைகளும், முறைமைகளும் இருப்பது புலனாகிறது.

01.இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கானது தூய இஸ்லாமிய ஒழுங்குமுறை ஆகும். இஸ்லாம் தான் அதனை அறிமுகப்படுத்தி அதன் அடிப்படைகளை அமைத்து சட்டங்களை ஆக்கியுள்ளது.

02. சமூகத்தில் பல மட்டங்களிலும் உள்ளவர்களின் தேவைகளையும் பல்வேறு வகையில் பூர்த்தி செய்கின்றது.

03. வக்பு ஒழுங்கானது பல அறக்கட்டளை நிறுவனங்களை உருவாக்க உதவி புரிந்துள்ளது. அது கல்வி சார்ந்த, தஃவா சார்ந்த, சமூகம் சார்ந்த, கலாசாரம் சார்ந்த இன்னோரன்ன துறைகளிலும் வியாபித்துக் காணப்படுகிறது.

04. இஸ்லாமிய வக்பு அமைப்பிற்கு இஸ்லாமிய நாகரீகத்தை உருவாக்குவதில் மகத்தான பங்கு உள்ளது. குறிப்பாக பொருளாதார மற்றும் சமூகவியல் துறைகளில் இதன் பங்கு அளப்பரியது.

05. வக்பு சொத்து என்பது ஒரு பொதுச் சொத்தாகும். எனவே, அதனை கையாளுகின்ற போது சில வரையறைகளும் நிபந்தனைகளும் உண்டு.

06. இஸ்லாமிய வக்பு அமைப்பானது பல்வேறு மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் மற்றும் மீள் கட்டமைப்பையும் வேண்டியிருக்கின்றது. ஏனெனில், பலாபலன்களை யாரும் இழந்து விடக்கூடாது.

07. மேலும், இந்த ஆய்வின் மூலம் புலனாவது ஷரிஆத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் நிபுணத்துவம் பெற்ற அறிஞர்கள் வக்பு சொத்தை உரியமுறையில் முதலீட்டு அதன் பலனை அல்லது இலாபத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட ஒரு சபையாக வக்பு சபை காணப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

08. இலங்கையில் வக்பு ஒழுங்கானது இலங்கை அரசினால் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். எனவே, அதில் மாற்றங்கள், சீர்திருத்தங்கள் மேற்கொள்வது முஸ்லிம்களுக்கு எந்த பாதிப்பையும் அல்லது தீங்கையும் ஏற்படுத்தாது.

09. வக்பு தொடர்பான நவீன காலப் பிரச்சினைகளை அல்குர்ஆன், சுன்னாவின் ஒளியிலும் மகாஸிதுஸ் ஷரிஆ கண்ணோட்டத்திலும் தீர்க்கவேண்டும்.

10. இலங்கை போன்ற முஸ்லிகள் சிறுபான்மையாக வாழும் ஒரு நாட்டில் இஸ்லாமிய ஷரிஆ சட்டத்தை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு, அமுல் படுத்தப் படுவது ஒரு

வரப்பிரசாதமாகும். எனவே அதனை துஷ்பிரயோகம் செய்யாமல் பயன்படுத்துவது எமது கடமையாகும்.

**முடிவுரை**

உஸ்மானிய சாம்ராஜ்ய ஆட்சிக்காலத்தின் போது இஸ்லாமிய வக்பு ஒழுங்குமுறையானது இஸ்லாமிய அரசின் பல்வேறு செலீனங்களை குறைத்துள்ளது. அந்தவகையில் வக்பு ஒழுங்கானது உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு முதலிடப்பட்டால் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் வக்பின் வகிபாகம் அளப்பரியதாகக் காணப்படும். எந்த அளவுக்கெனில் ஒரு நாட்டின் வரவு செலவுத்திட்டத்தில் கூட பாரியதொரு வருமானத்தைப் பெற்றுத்தரும் ஒரு வழிமுறையாக இது காணப்படும். அந்தப் பின்னணியில் இந்த ஆய்வு வக்பு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது.வக்பு பற்றிய இஸ்லாமிய நிலைப்பாடு, அதன் நிபந்தனைகள், வகைகள் மற்றும் நவீன கால பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்பவற்றை வழங்குகின்றது. மேலும் இந்த வழிமுறைக்கான நெறிமுறைகளையும் இஸ்லாமிய அறிஞர்கள் வகுத்துள்ளனர். அதேபோல ஆய்வின் இரண்டாவது பகுதியில் இந்த வக்பு ஒழுங்குமுறையானது இலங்கையில் தோன்றிய முறை,அது வளர்ச்சி பெற்ற விதம் மற்றும் அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றியும் அதனை ஒரு சிறுபான்மை நாட்டில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கான ஒரு அழகான வழிகாட்டியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நவீன காலத்தில் வக்பு தொடர்பான இஸ்லாமிய சிந்தனைப் போக்குகள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன. அவை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

**உசாத்துணைப் பட்டியல்**


01. யூசுப் அல் கர்ழாவி: (2015) நிழாமுல் வக்பி பில் பிக்ஹில் இஸ்லாமி, தாருல் மகாஸித், கெய்ரோ.

02. அபூ ஸஹ்றா: (2005) முஹாழராதுன் பில் வக்பி, தாருல் பிக்ரில் அரபி.

03. குர்துபி :(1974) அல் ஜாமி.:. லிஅஹ்காமில் குர்ஆன், தாருல் குதுபில் மிஸ்ரிய்யா, கெய்ரோ.

04. நி.:.மத் அப்துல் லத்தீப்:(1997) அதனுள் வக்பி பி தன்மியதில் முஜ்தமயி, ஜாமிஅதுல் அஸ்ஹர், எகிப்து.

05. சுலைமான் இப்னு அப்தில்லாஹ்:(2004) அல்வக்பு வ அதருஹு பி தன்மியதி மவாரிதில் ஜாமிஆத், ஜாமிஅதுல் இமாம் முஹம்மத் இப்னு ஸுஊத், சவூதி அரேபியா.

06. இப்னு மன்ளூர்:(1414ஹி) லிஸானுல் அரபி, தாரு ஜாகிர், பெய்ஷரூத்.

07. அப்துர் ரஹ்மான் இப்னு இப்றாகீம்:(2001) அல்அவ்காப் அல்இஸ்லாமிய்யா வ தவ்ருஹா அல்ஹழாரிய், தாருல் மஆதிர், மதீனா.

08. தலால் உமர்:(1998) அல்வக்புல் அஹ்லி, தாருல் கிப்லா,ஜித்தா.

09. மினா அப்துல் முன்இம்:(2010) அல்அவ்காப் அல்கைரிய்யா வ இமாரதுல் இன்சான் வல்மகான், தாருல் இஸ்லாம், கெய்ரோ.

10. அஹ்மத் அர்ரைஸுனி:(2014) அல்வக்பு அல்இஸ்லாமி மஜாலாதுஹு வ அப்ஆதுஹு, தாருல் கலிமா, எகிப்து.

11. அப்துல் ரஸ்ஸாக்:(2005) இதாரதுல் அம்வாலுல் வக்பி வ ஸுபுலு இஸ்திஸ்மாரிஹி.

12. காமில் முஹம்மத் ஹுசைன்:(2018) அதருல் வக்பி பி த.:.மி வ தத்விரித் த.:.லீம் அஷ்ஷரஈ வ தத்பிகாதுஹு அல்முஆஸிரா, அல்மு.:.தமருத் துவலி அல்அவ்வலு, ஜோர்டான்.

13. T.S.அமினுத்தீன்:(1998) இலங்கை தனியார் சட்டம்,அல்அமீன் பதிப்பகம், கொழும்பு.

14. A.H.G. அமீன்:(2006) வக்பு சட்டமும் நடைமுறையும், அல்அமீன் பதிப்பகம், கொழும்பு.

15. S.A.M. முஸம்மில்:(1992) பள்ளிவாசல், அல்ஹுதா வெளியீடு, கொழும்பு.

16. வக்பு திருத்தச் சட்டம்:(1998) முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

17. நீதிமுரசு:(2002-2004) முரசு:38,39 இலங்கை சட்டக் கல்லூரி, கொழும்பு.